# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2025

## ஒன்பதாம் வகுப்பு

பதிவு எண் : 

## தமிழ்

நேரம் : 3.00 மணி பகுதி - I மதிப்பெண்கள் : 100

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 15 x 1 = 15

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. திணை, பால், எண் ஆகியவற்றை உணர்த்தும் பால் காட்டும் விகுதிகள், இல்லாத திராவிட மொழி எது?
   அ) தமிழ் ஆ) தெலுங்கு இ) மலையாளம் ஈ) கன்னடம்
2. தமிழ் விடு தூது ________ என்னும் இலக்கிய வகையை சேர்ந்தது.
   அ) தொடர்நிலை செய்யுள் ஆ) புதுக்கவிதை
   இ) சிற்றிலக்கியம் ஈ) தனிப்பாடல்
3. நீர் நிலைகளோடு தொடர்பு இல்லாதது எது?
   அ) அகழி ஆ) ஆறு இ) இலஞ்சி ஈ) புலரி
4. பகுதி, விகுதி மட்டும் இடம்பெறும் சொல் எது?
   அ) வென்றார் ஆ) நடந்த இ) வளர்க ஈ) பொருந்திய
5. பெயரடை இடம்பெறாத தொடரைக் கண்டறிக.
   அ) நல்ல நண்பன் ஆ) இனிய வணக்கம்
   இ) எந்த ஓவியம் ஈ) கொடிய விலங்கு
6. பொருந்தாத தொடரைக் கண்டறிக.
   அ) பன்னிரு ஆழ்வார்களுள் ஆண்டாளும் ஒருவர்
   ஆ) சூடிக்கொடுத்த சுடர்கொடி என்று ஆண்டாள் அழைக்கப்படுகிறார்.
   இ) திருவெம்பாவையை இயற்றியவர் ஆண்டாள்.
   ஈ) நம்மாழ்வாரின் மகளாவார் ஆண்டாள்.
7. கல்வி இல்லாப் பெண்கள் எவ்வகை நிலத்திற்கு ஒப்பானவர்கள்?
   அ) நஞ்சை நிலம் ஆ) களர் நிலம் இ) உவர் நிலம் ஈ) புஞ்சை நிலம்
8. சரியான கூற்றினைத் தெரிவு செய்க.
   அ) வில்லுப்பாட்டு ஓர் இலக்கிய வடிவம்.
   ஆ) தமிழகத்தின் முதல் பெண் மருத்துவர் முத்துலட்சுமி.
   (i) அ மட்டும் சரி (ii) அ, ஆ இரண்டும் சரி
   (iii) அ, ஆ இரண்டும் தவறு (iv) ஆ மட்டும் சரி
9. 'பொதுவர்கள் பொலிஉறப் போர்' அடித்திடும் நிலப்பகுதி
   அ) குறிஞ்சி ஆ) நெய்தல் இ) முல்லை ஈ) பாலை
10. ஐந்துசால்புகளில் இரண்டு,
    அ) வானமும் நாணமும் ஆ) நாணமும் இணக்கமும்
    இ) இணக்கமும் சுணக்கமும் ஈ) இணக்கமும் பிணக்கமும்
11. தென்னிந்தியாவின் அடையாளச் சின்னமாக காங்கேயம் மாடுகள் போற்றப்படுகின்றன. இது எவ்வகைத் தொடர்?
    அ) வினாத்தொடர் ஆ) கட்டளைத் தொடர்
    இ) செய்தித் தொடர் ஈ) உணர்ச்சித் தொடர்

***பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (12,13,14,15) விடையளி.***

வானூர்தி செலுத்தல் வைய
    மாக்கடல் முழுது அளத்தல்
ஆனஎச் செயலும் ஆண்பெண்
    அனைவர்க்கும் பொதுவே!

12. இப்பாடலை இயற்றியவர் யா்?
அ) வள்ளுவர் ஆ) பாரதியார் இ) பாரதிதாசன் ஈ) பெயர் அறியவில்லை
13. இப்பாடல் இடம்பெற்ற நூல் எது?
அ) திருக்குறள் ஆ) குடும்ப விளக்கு இ) புறநானூறு ஈ) உயிர் வகை
14. வையம்- என்பதன் பொருள் யாது?
அ) துறை ஆ) தாழிசை இ) உலகம் ஈ) விருத்தம்
15. 'மர்க்கடல்' - இலக்கணக் குறிப்பு.
அ) பண்புத்தொகை ஆ) உவமைத்தொகை
இ) உரிச்சொல் தொடர் ஈ) வியங்கோள் வினைமுற்று

பகுதி-II (மதிப்பெண்கள்-18)

பிரிவு -1

**எவையேனும் நான்கனுக்கு விடையளிக்கவும்.** **4 x 2 = 8**
**(21-வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும்).**

16. விடைக்கேற்ற வினா அமைக்கவும்.
அ) மதுரை நகருக்கு அருகே உள்ள கீழடி என்னும் இடத்தில் அகழாய்வு நடைபெறுகிறது.
ஆ) தொன்மையானவை சுமார் 2300 ஆண்டுகளுக்கு முற்பட்டவை எனக் கருதப்படுகின்றன.
17. கண்ணி என்பதன் விளக்கம் யாது?
18. உங்காளது பள்ளியைச் சுற்றியுள்ள நீர் நிலைகளின் பெயர்களைக் குறிப்பிடுக?
19. ஏறுதழுவுதல் நிகழ்விற்கு இலக்கியங்கள் சுட்டும் வேறு பெயர்களைக் குறிப்பிடுக.
20. நடுகல் என்றால் என்ன?
21. 'தலை' என முடியும் குறளை எழுதுக.

பிரிவு -2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளி.** **5 x 2 = 10**

22. அடைப்புக்குள் உள்ள சொற்களைப் பொருத்தமான வினைமுற்றாக மாற்றி, கோடிட்ட இடங்களில் எழுதுக.
குழந்தைகள் அனைவரும் சுற்றுலா _______ (செல்)
23. பிழை நீக்கி எழுதுக.
சூறாவளியின் போது மேல்மாடியில் தங்காமல் தரைதளத்திலேயே தங்கியதால் தப்பிப்பான்.
24. மரபு இணைச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.
அ) மேடும் பள்ளமும் ஆ) நகமும் சதையும்
25. படிப்போம், பயன்படுத்துவோம் (கலைச்சொல் தருக).
அ) Hero Stone ஆ) Water Managemente

***குறிப்பு : செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா.***
**தொடரை பழமொழிக் கொண்டு நிறைவு செய்க**
அ) சித்திரமும் கைப்பழக்கம் ________.

26. ஒரு சொல்லால் தொடரின் இரு இடங்களை நிரப்புக.
எனக்கு ________ பங்குப் பிரித்துக் கொடுக்க வா!
கீழே ஈரம் ; பார்த்து உன் ________ ஐ வை.
27. கொடுத்த - பகுபத உறுப்பிலக்கணம் தருக.
28. சொல்லுக்குள் சொல் தேடுக: எட்டுக்கால்பூச்சி

பகுதி-III (மதிப்பெண்கள் -18)

பிரிவு -1

**எவையேனும் இரண்டனுக்கு விடையளிக்க.** **2 x 3 = 6**

29. மூன்று என்னும் எண்ணுப்பெயர் பிற திராவிட மொழிகளில் எவ்வாறு இடம்பெற்றுள்ளது?
30. அடுத்த தலைமுறைக்கும் தண்ணீர் தேவை - அதற்கு நாம் செய்யவேண்டியவற்றை எழுதுக.

31. ***உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.***

தென்னிந்தியாவின் அடையாளச் சின்னமாக காங்கேயம் மாடுகள் போற்றப்படுகின்றன. தமிழக மாட்டினங்களின் தாய் இனம் என்று 'காங்கேயம்' கருதப்படுகிறது. பிறக்கும் போது சிவப்பு நிறத்தில் இருக்கும் காங்கேயம் கன்றுகள், ஆறு மாதம் வளர்ந்த பிறகு சாம்பல் நிறத்துக்கு மாறிவிடுகின்றன. பசுக்கள் சாம்பல் அல்லது வெள்ளை நிறத்தில் இருக்கின்றன.

**வினாக்கள்:**

i) தென்னிந்தியாவின் அடையாளச் சின்னமாகக் கருதப்படுபவை எவை?

ii) "காங்கேயம்" பிறக்கும் போது எந்த நிறத்தில் இருக்கும்?

iii) இப்பத்திக்கு ஏற்ற தலைப்பு எழுதுக.

பிரிவு-2

**எவையேனும் இரண்டினுக்கு விடையளிக்கவும்.** 2 x 3 = 6

***34-வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.***

32. தமிழ் விடுதூது உணர்த்தும் தமிழின் சிறப்புகளை எழுதுக.

33. முழு உருவச் சிற்பங்கள் - புடைப்புச் சிற்பங்கள் இரண்டிற்கும் உள்ள வேறுபாடு யாது?

34. அ) காடெல்லாம் கழைக்கரும்பு ... எனத் தொடங்கும் பெரியபுராணம் பாடல்

***(அல்லது)***

ஆ) தொல்காப்பியர் எழுதிய 'உயிர்வகைப்' பாடலை அடிமாறாமல் எழுதுக.

பிரிவு - 3

**எவையேனும் இரண்டனுக்கு விடையளிக்கவும்.** 2 x 3 = 6

35. அளவையாகு பெயர்களின் வகைகளை விளக்குக.

36. எண்ணுப்பெயர், திசைப்பெயர்களில் வல்லினம் மிகுந்து வருவதைச் சான்றுடன் எழுதுக.

37. பிறர்நாணத் தக்கது தான் நாணான் ஆயின்
அறம்நாணத் தக்கது உடைத்து - அலகிட்டு வாய்பாடு தருக.

பகுதி - IV (மதிப்பெண்கள் 25)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** 5 x 5 = 25

38. அ) வானவில்லை ஒப்பிட்டுப் பெரியபுராணம் கூறும் செய்தியை விளக்கி எழுதுக.

***(அல்லது)***

ஆ) சொற்பொருள் பின்வரும் நிலையணியை எடுத்திக்காட்டுடன் விளக்குக.

39. அ) பள்ளி நேரம் முடிவதற்கு முன்பு வீட்டிற்குச் செல்ல அனுமதி வேண்டி விண்ணப்பம் வரைக.

***(அல்லது)***

ஆ) சுற்றுச்சூழலைப் பேணிக்காக்கும் பள்ளிகளின் வரிசையில் மாவட்டத்திலேயே சிறந்ததாக உங்கள் பள்ளி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அதனை கொண்டாடும் விழாவில் கலந்துகொள்ளும் மாவட்டக் கல்வி அலுவலருக்கு வரவேற்பு மடல் ஒன்றை எழுதுக.

40. ***காட்சியைக் கண்டு கவிதை எழுதுக.***



TNPSC JOB



41. அஞ்சல் அலுவலகத்தில் பணம் பெறும் படிவத்தை நிரப்புக.

42. அ) நான் பாராட்டுப் பெற்ற சூழல் ஐந்திணை எழுதுக.

*(அல்லது)*

ஆ) ***மொழி பெயர்க்க.***

i) Every flower is a soul blossoming in nature - Gerard De Nerval

ii) Sunset is still my favourite colour, and rainbow is second - Mattie Stepanek

***குறிப்பு : செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா.***

**உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

மதுரை நகருக்கு அருகே உள்ள கீழடி என்னும் இடத்தில் நடத்தப்பட்ட அகழாய்வில் சுடுமண் பொருள்கள், உலோகப் பொருள்கள், முத்துகள், கிளிஞ்சல் பொருள்கள், மான் கொம்புகள், சோழிகள், கிண்ணங்கள், துளையிடப்பட்ட பாத்திரங்கள், இரத்தினக் கல் வகைகள், பழுப்பு, கறுப்பு, சிவப்பு - கருப்புப் பானைகள், சதுரங்கக் காய்கள், தானியங்களைச் சேகரிக்கும் கலன்கள், செம்பு சங்கு வளையங்கள், எலும்புகள், பானை ஓடுகள், கற்கருவிகள், மட்கலன்கள் போன்ற பல்வேறு தொல்லியல் பொருள்கள் கிடைத்துள்ளன. மூன்று வெவ்வேறு காலகட்டங்களைச் சேர்ந்த இவற்றுள் தொன்மையானவை சுமார் 2300 ஆண்டுகளுக்கு முற்பட்டவை எனக் கருதப்படுகின்றன.

i) மதுரை நகருக்கு அருகே எந்த ஊரில் அகழாய்வு நடத்தப்பட்டது?

ii) தொன்மையானவை எத்தனை ஆண்டுகளுக்கு முற்பட்டவை எனக் கருதப்படுகின்றன?

iii) அகழாய்வில் கிடைத்த தொல்பொருள்கள் யாவை?

iv) கீழடி எங்கு உள்ளது?

v) மேற்கண்ட பத்தி எதைக் குறிப்பிடுகிறது?

## பகுதி - V (மதிப்பெண்கள் : 24)

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளி.** **3 x 8 = 24**

43. அ) காலந்தோறும் தன்னை புதுப்பித்துக்கொள்ளும் தமிழின் தன்மைகள் பற்றி எழுதுக.

*(அல்லது)*

ஆ) பெரியபுராணம் காட்டும் திருநாட்டுச் சிறப்பினை தொகுத்து எழுதுக.

44. அ) நீரின்றி அமையாது உலகு - என்னும் வள்ளுவரின் அடி உணர்த்தும் பொருள் ஆழத்தை எடுத்துக்காட்டுடன் விவரிக்க.

*(அல்லது)*

ஆ) 'தாய்மைக்கு வறட்சி இல்லை' என்னும் சிறுகதையில் வரும் ஏழைத் தாயின் பாத்திரப்படைப்பை விளக்குக.

45. அ) உங்களின் நண்பர், பிறந்தநாள் பரிசாக அனுப்பிய 'கால் முளைத்த கதைகள்' (ஆசிரியர். எஸ்.இராமகிருஷ்ணன்) என்னும் நூல் குறித்த கருத்துகளை கடிதமாக எழுதுக.

*(அல்லது)*

ஆ) நீர் எவ்வாறெல்லாம் மாசடைகிறது என்பதையும், அவற்றை எவ்வாறு தடுக்கலாம் என்பதைப் பற்றியும் கட்டுரை எழுதுக.

******

TNPSC JOB | www.tnpscjob.com